# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2064/27 - 2018 මාර්තු 28 වැනි බදාදා - 2018.03.28

***2064/27 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு    பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவில், தெஹிவின்ன கோரளையில், 56 டீ நெமுதன்ட கிராம அலுவலர் பிரிவில், மஹவெல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2017.06.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட பி/எச்எல்ஈ/2017/64 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் 0.1012 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட 'டீன்ஸ்லேன் வத்த', 'எட்டம்பிட்டிய வத்த' ஆகிய காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' – டீன்ஸ்லேன் வத்த, எட்டம்பிட்டய வத்த – விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்**

*வடக்கு: வீதி மற்றும் இ.கி. வ. இல. 108 இல் காணித்துண்டு இல. 303; கிழக்கு: இ.கி. வ. இல. 108 இல் காணித்துண்டு இல. 303; தெற்கு: இ.கி. வ. இல. 108 இல் காணித்துண்டு இல. 303; மேற்கு: இ.கி. வ. இல. 108 இல் காணித்துண்டு இல. 303 மற்றும் வீதி.*

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/9/2017/டபிள்யூஎஸ்/165.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்ல.
2017, ஒற்றோபர் 26.

*4-480*